

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.07.2023) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மஹிந்திரா ஆராய்ச்சி மையத்தில் (Mahindra Research Valley) 210 கோடி ரூபாய் முதலீட்டில், 1000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மஹிந்திரா-மஹிந்திராநிறுவனம்நிறுவியுள்ளமின்கலன்பரிசோதனைஆய்வகத்தை(Battery Test Lab)திறந்துவைத்து, திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் - செய்யார் தொழிற்பூங்காவில் உள்ள மஹிந்திரா SUV பரிசோதனைத் தளத்தில் 290 கோடி ரூபாய் முதலீட்டில் மின் வாகன விபத்து பரிசோதனை ஆய்வகம் (EV Crash Test Lab) அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, மஹிந்திரா-மஹிந்திரா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் ஆர்.வேலுசாமி, திருமதி அபாந்தி சங்கரநாராயணன், எஸ்.சக்திவேலன் மற்றும் போய்ட்டா தனஞ்சயராவ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.7.2023) முகாம் அலுவலகத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.07.2023) தலைமைச் செயலகத்தில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட இரண்டாம் நிலைக் காவலர்கள் 143 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் புஜாரி மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2023) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 61 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 4 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் ஜி. அறிவொளி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில்

# 143 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 2-

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் 143 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களுக்கு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.07.2023) தலைமைச் செயலகத்தில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட இரண்டாம் நிலைக் காவலர்கள் 143 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

சிறைத்துறை குற்றவியல் நீதிமுறை அமைப்பின் முக்கிய அங்கமாக விளங்குகிறது. குற்றவாளிகளை சிறையில் வைத்து, மீண்டும் குற்றம் இழைக்காத வண்ணம் அவர்களைத் தடுப்பது மட்டுமல்லாமல், விடுதலைக்குப் பின்னர் சமூகத்தில் எளிதில் இணைந்து, ஆக்கமுடைய குடிமக்களாக விளங்கும் வகையில் அவர்களை சீர்திருத்தி, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே சிறைத்துறையின் முக்கிய குறிக்கோளாகும்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறையின் செயல் திறனை மேம்படுத்திட கடந்த 2 ஆண்டுகளில் ரூ.5.71 கோடி செலவினத்தில் பாதுகாப்பு கருவிகள், கணினி போன்ற பல்வேறு வகையான உபகரணங்கள் அரசால் வழங்கப்பட்டுள்ளன. களப்பணியாளர்களின் நலனுக்காக மிகை நேர பணிக்கான ஊதியம் ரூ.200/-லிருந்து ரூ.500/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2252 களப்பணியாளர்கள் பயன் பெற்றுள்ளனர். இடர்படி ரூ.900லிருந்து ரூ.1000ஆக சிறை அலுவலர் முதல் சிறை கண்காணிப்பாளர் வரையிலும், ரூ.800லிருந்து ரூ.1000ஆக இரண்டாம் நிலைக்காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 3526 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

ரூ.1 கோடி செலவினத்தில் சிறைவாசிகளை நல்வழிப்படுத்தி மறுவாழ்வு அளித்திட "சீர்திருத்த சிறகுகள்" என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

சிறைவாசிகளின் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற புத்தக கண்காட்சிகளில் முதல் முறையாக சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை சார்பாக அரங்கு அமைக்கப்பட்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் நன்கொடையாக பெறப்பட்டு சிறை நூலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

சிறைகளில் பணிபுரியும் மனநல ஆலோசகர்களின் மதிப்பூதியம் ரூ.15,000/-ல் இருந்து ரூ.25,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதோடு,

12 சமூக இயல் வல்லுநர்கள் பணியிடங்கள் மற்றும் 3 பெண் நல அலுவலர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தற்போது, தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களுக்கு 143 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ள இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு திருச்சி தற்காலிக காவலர் பயிற்சி பள்ளியில் 6 மாத கால அடிப்படை பயிற்சியும், சிறைகளில் ஒரு மாதகால உள்களப் பயிற்சியும் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் புஜாரி மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (31.7.2023) கனடா நாட்டிற்கு அரசு முறை பயணமாக ஒட்டாவா விமான நிலையத்திற்கு வருகை தந்தபோது, இந்திய தூதரக அதிகாரிகள் வரவேற்றனர். உடன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தாதேவி உள்ளனர்.

### மணிப்பூர் மக்களின் கருத்துகளை

# நாடாளுமன்றத்தில் விவாதிக்க அனுமதிக்க வேண்டும்!

## மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேட்டி!

புதுடில்லி, ஆக. 2 -

மணிப்பூரில் மக்களை சந்தித்த போது அவர்கள் கூறிய கருத்துகளை அரசு அறிந்து கொள்ளும் வகையில், அதுகுறித்து நாடாளு மன்றத்தில் எம்.பி.க்கள் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என தி.மு.க. மக்களவைக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.



மணிப்பூர் மாநிலத்தை பார்வையிடச் சென்ற 'இந்தியா' கூட்டணியில் இடம் பெற்றுள்ள நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடங்கிய குழு ஞாயிற்றுக்கிழமை டில்லி திரும்பியது. இதில் இடம் பெற்ற எம்.பி. கனிமொழி, செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

முகாம்களில் தங்க வைக்கப்பட்ட பாதிக்கப்பட்ட மணிப்பூர் மக்களைச் சந்தித்தோம். அவர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பிப் போகக் கூடிய நிலையில் இல்லாமல் மோசமான சூழ்நிலையில் அச்சத்தில் உள்ளனர்.

முகாம்களில் உள்ள மக்களுக்கும் உணவுத் தட்டுப்பாடு உள்ளது. குழந்தைகளுக்கு கூட உணவு இல்லை. மருத்துவ வசதியும் இல்லை. நாங்கள் சனிக்கிழமை பிஷ்ணுபூர் என்கிற பகுதியிலுள்ள முகாம்களுக்குச் சென்று திரும்பி வரும்போது கூட மக்கள் சாலைகளில் தர்னாவில் ஈடுபட்டு வந்தனர். அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல முடியவில்லை. குறைந்தபட்சம் இணைய வசதி கூட இல்லாத நிலையில், நிகழாண்டு கல்வியை இழந்துவிடும் சூழ்நிலையில் அவர்கள் உள்ளனர். மருத்துவக் கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் உள்ளனர். எந்தத் தரப்பினரும் அரசின் மீது நம்பிக்கையுடன் இல்லை. முதல்வரோ, அமைச்சரோ மக்களைச் சந்திப்பதில்லை. பிரச்சினைக்குரிய மைத்தேயி, குகி ஆகிய இரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வன்முறையை தடுக்க அரசு முயற்சிக்கவில்லை என்கின்றனர்.

இதனால், அனைத்து தரப்பினரையும் அழைத்துப் பேசி நிரந்தரமாக அமைதி திரும்ப ஒன்றிய அரசோ, மாநில அரசோ முயற்சித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை. பாலியல் வன்கொடுமைக்குள்ளான இரு பெண்களின் குடும்பத் தினரையும் பெண் எம்.பி.க்கள் மட்டும் சென்று சந்தித்தோம். பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் தாயார் தன்னுடைய கணவரை இழந்துள்ளார். காவல் துறை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவர் வருந்தினார்.

தங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இரு பெண்களின் தாயார்களும் தைரியமாக பேசினர். இப்படி பலதரப்பட்ட மக்களைச் சந்தித்து பேசி உணர்ந்து கொண்ட விஷயங்கள் ஏராளமாக உள்ளன. ஒன்றிய அரசு அறிந்து கொள்ளவேண்டிய பல விவரங்களை அம்மாநில மக்கள் எங்களிடம் கூறியுள்ளனர். இவற்றை அரசு அறிந்து கொள்ளும் வகையில், இது தொடர்பாக நாடாளு மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். பிரதமரும் பதிலளிக்க வேண்டும் என்றார் கனிமொழி கருணாநிதி எம்.பி.

### மோடி ஆட்சியில் காணாமல் போன

# சிறுமிகள் - பெண்கள் 13.13 லட்சம் பேர்!

புதுடெல்லி, ஆக. 2 -

2019ஆம் ஆண்டு முதல் 2021 வரை 13.13 லட்சம் சிறுமிகள், பெண்கள் காணாமல் போயுள்ளனர் என ஒன்றிய அரசு அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்பிற்காக பல முயற்சிகளை எடுத்துள்ளதாக மோடி அரசு நாடாளு மன்றத்தில் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் தரவுகளின் படி, நாடு முழுவதும் 2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கு இடையில் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் 10,61,648 பேரும், அதற்கும் குறைவான வயதுடைய 2,51,430 பெண்களும் காணவில்லை.

தலைநகர் டெல்லியில், 2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கு இடையில் 61,054 பெண்கள் 22,919 சிறுமிகள் காணாமல் போயுள்ளனர்.

ஜம்முகாஷ்மீரில் 8,617 பெண்கள் 1,148 சிறுமிகளைக் காணவில்லை. மத்தியப் பிரதேசத்தில் 2019 முதல் 2021 வரை 1,60,180 பெண்கள், 38,234 சிறுமிகள் காணாமல் போயுள்ளனர்.

இதே காலகட்டத்தில் மேற்கு வங்கத்திலிருந்து 1,56,905 பெண்கள் 36,606 சிறுமிகள், மகாராஷ்டிராவில் 1,78,400 பெண்கள், 13,033 சிறுமிகள் காணாமல் போயுள்ளனர்.

ஒடிசாவில், மூன்று ஆண்டுகளில் 70,222 பெண்கள் 16,649 சிறுமிகள் காணாமல் போயுள்ளனர். யூனியன் பிரதேசங்களில், காணாமல் போன பெண்களின் எண்ணிக்கையில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.